**ஜூன் – 14**

**"பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்." - 1பேது 5 : 5**

அநேகமாக மற்றெல்லாவற்றுக்கும் மேலாக நம்முடைய தாழ்மையை நன்கு காப்போமாக. நம்முடைய சொந்தக் கண்களில் நாம் சிறியவர்களாகத் தோன்றும்போது மாத்திரமே, தேவன் நமக்கு ஆபத்தில்லாமல் நம்மை உபயோகிக்கக் கூடும். இருந்தாலும், நேர்மை, விசுவாசம், எஜமான் பக்தி, கற்பு இவைகளில் ஒவ்வொரு சோதனையிலுமிருந்து அவர் நமக்குப் பாதுகாப்பளிக்கிறதில்லை. ஆகையால், கர்த்தர் உனக்கு இன்று ஒரு சிறு புகழ்ச்சியைக் கொடுத்தாரானால், அவருடைய ஊழியத்தில் வெற்றியின் ஒரு சிறு உற்சாகத்தைக் கொடுத்தாரானால், உன் மூலமாக வேலை செய்யத் தேவன் பிரியமாயிருந்தால்த் தவிர, உன்னுடைய சொந்தத் தகுதியின்மையையும், உன்னுடைய குறைபாட்டையும் நினைவு கூர்ந்து, அதைத் தாழ்மையுடனும் சாந்தத்துடனும் பெற்றுக்கொள். உன்னுடைய ஒழுங்கிற்காகவும், உன்னுடைய குணத்தை சரியாக சமப்படுத்துவதற்காகவும் தேவையான அவமானங்களை நீ நாளை பெறுவதற்கு சரியாகத் தயாராக இரு. நேற்றைய வெற்றி இன்றைய அவமானத்திற்கடியில் உனக்கு எரிச்சலுண்டாக்கினால், எச்சரிக்கையாயிரு. நீ இருக்க வேண்டிய பிரகாரம், ஆவியின்படி பூரணமாக அபிவிருத்தி செய்யப்படவில்லை. **- Z '95, 19 (R 1919).**

பெருமையுள்ளவர்கள் தங்களைப்பற்றி மிகவும் உயர்ந்த மதிப்பைக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் மேலேயே நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். தற்புகழ்ச்சியை நாடுகிறார்கள். நம் இனத்திலுள்ள தாழ்மையுள்ளவர்கள் தங்களைப்பற்றி ஒரு தாழ்மையான மதிப்பைக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் மீதல்லாமல், தேவன் மீது நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அவருடைய பிரயோஜனத்திற்காகத் தங்களையே தாழ்த்துகிறார்கள். பெருமையுள்ளவர்கள் தங்களுடைய திறமைகளுக்கும் யோக்கியதைக்கும் அப்பாலுள்ள பதவிகளுக்காக ஆசைப்பட்டு, மற்றவர்களைத் தள்ள அடிக்கடி நாடுகிறார்கள். எப்பொழுதும் தேவனுடைய ஒழுங்கிலே தலையிடுகிறார்கள். இப்படிப்பட்டவர்களை அவசியமாகவே தேவன் எதிர்க்க வேண்டும். அப்போது, தாழ்மையுள்ளவர்கள் தேவனால் முன்னேற்றப்படுகிறார்கள். ஏனெனில், அவர்களுடைய திறமைகளும் யோக்கியதையும் தேவதயவைப் பெறுவது நியாயமானதொன்று காட்டுகிறது. அந்தத் தயவைப்பெற அவர்கள் சுய நலத்தோடும், தவறாகவும் ஆசைப்படுகிறதில்லை. **-P '34, 95.**

**ஒத்து வாக்கியங்கள் :-** யாக் 4:6,10; ஏசா 57:15; 66:2; மத் 20:26-28; மாற் 10:43-45; யோபு 22:29; நீதி 15:33; 29; நீதி 15:33; 29:23; தானி 4:37; லூக் 14:11; 18:14; 1பேது 5:6. **கோபுர வாசிப்பு : Z '13, 363 (R 5361)**

**வினாக்கள் :** இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வார அனுபவங்கள் எவை? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவை எதில் முடிந்தன?